# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● செப்டம்பர் 9, 2017 Weekly E-paper ● September 9, 2017


# ஜனநாயகம் அடைக்கப்படுகிறது சிறைக்கதவு திறக்கப்படுகிறது!



சுப.வீரபாண்டியன்

'நீட்' தேர்வு எதிர்ப்பு, தமிழகமெங்கும் பெருநெருப்பாய்க் கிளர்ந்து எழுந்துள்ளது. மாணவி அனிதாவின் உயிர்த் தியாகம், சமூக நீதிப் போராட்டத்தை மீண்டும் கொழுந்து விட்டு எரிய வைத்திருக்கிறது. சபரிமாலா என்னும் ஆசிரியை தன் பணியையே உதறி எறிந்துவிட்டுக் களத்தில் குதித்துள்ளார்.

போராட்டத்தின் அனலைத் தாங்கமுடியாத சிலர் நீதிமன்றம் சென்று, போராட்டங்களுக்குத் தடை பெற முயன்றுள்ளனர். வழக்கம்போல், நீதிமன்றமும், சமூக நீதிச் சிக்கலை வெறும் சட்டம் ஒழுங்குச் சிக்கலாகப் பார்த்துள்ளது. சட்டம் ஒழுங்கு கெட்டுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தமிழக அரசுக்கு அறிவுரை கூற, அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு, தமிழகக் காவல்துறை அதாவது தமிழக அரசு, செப். 8 ஆம் தேதி திருச்சியில் நடைபெறவிருந்த தி.மு.க. தலைமையிலான அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குத் தடை விதித்தது.

பொதுக்கூட்டம் நடைபெறவிருந்த திடல் 5.30 மணிக்குக் காலியாக இருந்தது. தடை விதிக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே 20 ஆயிரம் நாற்காலிகளும் நிரம்பி வழிந்தன. அடிக்க அடிக்கப் பந்து எழும் என்பது அங்கு உண்மையாயிற்று. தலைவர்கள் மேடைக்கு வந்தனர். கூட்டம் தொடங்கிற்று. காவல்துறை கண் பிதுங்கி நின்றது. மக்களின் எழுச்சிக்கு முன்னால், ஒடுக்குமுறை முயற்சிகள் எகிறிப்போயின!

ஆனாலும் ஜனநாயக மறுப்பு வேலைகள் தொடங்கிவிட்டன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். முதல் முறையாக, நீட் தேர்வை எதிர்த்துப் போராடிய 5 பெண்கள் உள்ளிட்ட 81 இளைஞர்கள் மதுரையில் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இது வெறும் தொடக்கம்தான் என்று தெரிகிறது. எப்படியாவது போராட்டத்தை அடக்கிவிட வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்து, அதற்கு இங்கே உள்ள கையாலாகாத மாநில அரசைப் பயன்படுத்துகிறது.

முரசொலி பவழ விழாவில், தளபதி அவர்கள் சொன்னது போல மோடி அரசு ஒரு மோசடி அரசு என்பதை நாடு அறிந்துகொண்டது.

இனிமேல், நீட் தேர்வுக்கு எதிராக மட்டுமில்லை, அரசை எதிர்த்து யார் குரல் கொடுத்தாலும், ஒடுக்குமுறைகள் தொடரும் என்பது தெளிவாகிவிட்டது.


ஜனநாயகம் அடைக்கப்படுகிறது. சிறைக்கதவு திறக்கப்படுகிறது. தோழர்களே அணியமாகுங்கள் சிறை நம்மை அழைக்கிறது! ●


வெளிவந்துவிட்டது!

சுப.வீரபாண்டியனின்

பகத்சிங்கும் இந்திய அரசியலும்

7ஆம் பதிப்பு



விலை ரூ.100/

தோழர் சுபவீயின் நூல்கள், பேரவையின் வெளியீடுகள் அனைத்தும்

கருஞ்சட்டை அலுவலகத்தில்

விற்பனைக்குக் கிடைக்கும்!

திங்கள் முதல் சனி வரையில் (காலை 10 – மதியம் 1 மணி)

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**


மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**


## சுயமரியாதைத் திருமணத்தில்...



**08.09.2017** அன்று, பட்டுக்கோட்டை அருகில், காசாங்காடு என்னும் ஊரில், சிலம்பரசன் - சாகித்யா ஆகியோரின் சுயமரியாதைத் திருமணத்தைத் தோழர்கள் சுப.வீரபாண்டியன், வசந்தா ஆகியோர் நடத்தி வைத்தனர்.

## பவானி கிளைப் பொறுப்பாளர்

ஈரோடு மாவட்டம் பவானி வட்டம் சித்தார் பகுதித் தோழர் குமார் 1.9.17 அன்று பவானி வட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார். உடன் தோழர்கள் புலேந்திரன், ஈரோடு மாவட்டத் தலைவர் சேகர்.



## தமிழ்நாட்டில் பண்பாட்டுத் திணிப்பு



பட்டுக்கோட்டைக்கும் அறந்தாங்கிக்கும் இடையில் உள்ள கீரமங்கலம் என்னும் ஊரில் இப்படியொரு சிவன் பேருருவச் சிலை உள்ளது. இது சுதையினால் செய்யப்பட்டுள்ளது. பொதுவாகத் தமிழ்நாட்டுச் சிலைகள், கல்லினாலும், ஐம்பொன்னினாலும்தான் செய்யப்பட்டிருக்கும். வட இந்தியாவில்தான் இப்படிப்பட்ட சுதையினால் ஆன சிலைகளைப் பார்க்கமுடியும். சிலை வடிப்பிலும் வட இந்தியப் பண்பாடு திட்டமிட்டுப் பரப்பப்படுவதையே இச்சிலை காட்டுகிறது!

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## காலம் கனிந்து வருகிறது

**1965**ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டது மாணவர்களால். அப்படியொரு கொந்தளிப்பு இன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

அன்றையப் போராட்டம் காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக நடந்தது. மக்களுக்கான ஆட்சியாக இல்லாமல் மனம் போன போக்கில் நடந்த ஆட்சி அது. விவசாயிகளின் வறுமையை கணக்கில் கொள்ளாத அன்றைய முதல்வர் பக்தவச்சலம், அவர்களை எலிக்கறி சாப்பிடச் சொன்னார். இது ஒன்று போதும் அன்றைய அலங்கோல ஆட்சிக்கு.

போதாக் குறைக்கு இந்திதான் ஆட்சி மொழி என்று சொன்னது மத்திய காங்கிரஸ் அரசு. களம் கண்டார்கள் மாணவர்கள். அந்தக் கொந்தளிப்பு 1967ஆம் ஆண்டில் ஆட்சியை மாற்றிக் காட்டியது. தி.மு.க. தலைமையில் அமைந்தது தமிழக அரசு.

இன்று தமிழ்நாடு கொந்தளித்துக் கொண்டிருக்கிறது மாணவர்களால்.

மோசடி வாக்குறுதிகளால் ஆட்சியைப் பிடித்தார் பா.ஜ.க.வின் மோடி.

பெயருக்குப் பிரதமர் அவர். ஆனால், உலகம் சுற்றும் வேலையை அவருக்குக் கொடுத்துவிட்டு ஆட்சியைப் பார்த்துக் கொண்டது ஆர்.எஸ்.எஸ்.

ஒரே உணவு, ஒரே பண்பாடு, ஒரே மொழி, ஒரே இந்தியா என்று ஒரே இந்து தத்துவத்தை திணித்துக் கொண்டிருக்கிறது இன்றைய மத்திய பா.ஜ.க. மோடி அரசு.

மாட்டுக் கறி சாப்பிட்டால் அடி, உதை, கொலை.

சனநாயக அடிப்படையில் மாற்றுக் கருத்து சொன்னால் அங்கே நிகழ்வது வன்முறை.

இந்துத்துவ வெறிக்கு எதிராக சனநாயகம் பேசினால் அவர்கள் அறிஞர்களானாலும் சரி, எழுத்தாளர்களானாலும் சரி, பத்திரிக்கையாளர்களானாலும் சரி கொலைதான்.

பெயருக்கு மோடி கண்டிப்பார், எதுவும் செய்ய மாட்டார்.

ஏழை மக்களுக்கு பதினைந்து லட்சம் ரூபாய் தருகிறேன் என்று சொன்ன மோடி -

ரேசன் கடைக்கு மூடு விழா நடத்தி, எரிவாயு மானியத்தை நீக்கி அதே ஏழைகளை நடுத்தெருவில் நிறுத்தினார்.

எல்லாவற்றையும் விட தமிழகத்தில் கால் ஊன்ற முடியாத பா.ஜ.க., புறக்கடை வழியாக நுழைந்து ஆட்சி அமைக்க அ.தி.மு.க.வைக் கைப்பாவையாக்கித் தமிழகத்தின் குரல்வளையை நெறித்துக்கொண்டிருக்கிறது.

பா.ஜ.க.வின் பினாமியான அ.தி.மு.க.வுக்கு, அதன் அணிகளுக்குள்ளான சண்டையே முதன்மையாகி விட்டது. அது மக்களுக்கான அரசாக இல்லை.

மக்கள் வாழ்க்கைக்காகப் போராடுகிறார்கள். மாணவர்கள் கல்விக்காகப் போராடுகிறார்கள். அரசு தொழிலாளர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து தொழிலாளர்கள், போன்றவர்களின் போராட்டகளும் தொடர்கின்றன.

குரங்கு கைப் பூ மாலையான தமிழகத்தின் இந்த நிலை மாறக் காலம் கனிந்துவிட்டது.

பண்பாட்டு மக்கள் தொடர்பகம் எடுத்த வாக்கெடுப்புப் புள்ளி விவரம் சொல்கிறது இந்த ஆட்சி நீடிக்காது என்று. அடுத்த ஆட்சி தி.மு.க. முதல்வர் மு.க.ஸ்டாலின் என்கிறது அந்த கணிப்பு.

இதுதான் மக்களின் மனநிலை. காலம் கனிந்துவிட்டது, உதய சூரியன் உதிக்கும் நேரம் நெருங்கிவிட்டது.



# பேனாவை மிரட்டும் துப்பாக்கிகள்!

● சுபவீ

குஜராத், மராட்டியம், கர்நாடகம் என்று இந்தியாவின் மேற்குப் பகுதி, இந்துத்வா பயங்கரவாதிகளின் இருப்பிடம் ஆகியுள்ளது. அவர்களின் அடுத்த குறி தமிழ்நாடுதான் என்பதை நாம் அறிவோம்.

கடந்த நான்கு ஆண்டுகளில், மூடநம்பிக்கைகளை எதிர்த்த, இந்துத்வாவை எதிர்த்த நான்கு எழுத்தாளர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். 2013இல் நரேந்திர தபோல்கர், 2015இல் கோவிந்த் பன்சாரே, குல்பர்கி, இப்போது 2017இல் பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ். இந்துத்வா பயங்கரவாதத்திற்கு இன்னும் எத்தனை உயிர்கள் தேவைப்படுகின்றன என்று தெரியவில்லை.

கொல்லப்பட்ட நான்கு எழுத்தாளர்களும் ஒரே மாதிரியான சித்தாந்தத்தைக் கொண்டவர்கள். முற்போக்குச் சிந்தனையாளர்கள். ஒரே மாதிரி கொல்லப்பட்டிருக்கின்றனர். அவர்களைக் கொன்றவரைகளைக் கண்டுபிடித்து இன்றுவரையில் தண்டிக்கவில்லை. நம் நாட்டின் ஜனநாயகம் பற்றி நாம் வாய் கிழியப் பேசுகின்றோம். ஆனால், இடதுசாரி, முற்போக்கு, பகுத்தறிவுக் கருத்துகளை பேசுவோருக்கு இங்கே உயிருக்கே பாதுகாப்பில்லை என்ற நிலைதான் தொடர்கிறது.

கௌரி லங்கேஷ் பத்திரிகே என்னும் கன்னட வார இதழின் ஆசிரியர் அவர். மூட நம்பிக்கைகளை எதிர்த்துக் கடுமையாக எழுதக் கூடியவர். பாஜக குறித்தும், சங் பரிவாரங்கள் குறித்தும் அவருடைய விமர்சனங்கள் சமரசமற்றவை. அனைத்தையும் கடந்து, மோடி பற்றி அவர் அண்மையில் எழுதிய விமர்சனங்கள் கூர்மையானவை. அவற்றை இந்துத்வா பயங்கரவாதிகளால் தாங்கிக்கொள்ள முடியாதுதானே! பேனாவிற்கு எதிராகப் பேனாவைக் கூர் தீட்ட முடியாத கோழைகள், பேனாவிற்கு எதிராகத் தங்கள் துப்பாக்கிகளை நீட்டியுள்ளனர்.

கௌரி லங்கேஷ் தன் இதழில் விளம்பரங்களைக் கூட வெளியிடுவதில்லை என்பதுகுறிக்கத் தக்கது. விளம்பரங்களைப் பெற்றால், பிறகு அவர்களை விமர்சித்து எழுதுவது கடினம் என்பதால், பொருள் நட்டம் பற்றிக் கவலைப்படாமல், ஆண்டுக்கட்டணங்களை மட்டுமே நம்பித் தன் இதழை நடத்தியவர் அவர். அத்தகு நேர்மையாளருக்குத்தான் துப்பாக்கிக் குண்டுகளைப் பரிசாக வழங்கியிருக்கிறது, பயங்கரவாதிகளின் உலகம். வீட்டு வாசலில் காத்திருந்து, அவருடைய மார்பிலும், நெற்றிப் பொட்டிலும் குறி பார்த்துச் சுட்டுள்ளனர்.

தீண்டாமையை மட்டும் எதிர்த்த காந்தியார் இவ்வுலகில் வாழ அனுமதிக்கப்பட்டார். ஆனால் என்று அவர் சாதி அமைப்பையும் சேர்த்து எதிர்க்கத் தொடங்கினாரோ, அன்றே அவரின் வாழ்வுரிமையைப் பறித்துவிட்டது பயங்கரவாதக் கும்பல். அப்படித்தான், இடதுசாரிக் கலைஞர் சப்தர் ஹஸ்மியையும் சுட்டுக் கொன்றது.

இவைகள் வெறும் கொலைகள் மட்டுமில்லை. மிரட்டல்களும் கூட! இந்துத்துவாவிற்கு எதிராக யாரேனும் பேசினால், எழுதினால், பாடினால் இதுதான் முடிவு என்று சொல்லாமல் சொல்லி மிரட்டுகிறது பயங்கரவாதம்.

தேவ கவுடா, குமாரசாமி ஆகியோரின் துணையோடு, கர்நாடகத்திற்குள் உட்புகுந்த பாஜக, இன்று அங்கே பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.. தமிழ்நாட்டிலும், அதிமுக, தேமுதிக, புதிய தமிழகம் ஆகிய கட்சிகளின் துணையோடு உள்ளேவரத் துடிக்கிறது. ரஜினிகாந்த்தும் தங்களுக்குப் பயன்படமாட்டாரா என்ற ஏக்கத்தில் இப்போது அவர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு மிகக் கவனமாக இருக்க வேண்டிய நேரம் இது! சற்று ஏமாந்தாலும், பாஜக நுழைந்துவிடும். ஒரு நூற்றாண்டாய்த் திராவிட இயக்கமும், இடதுசாரி இயக்கமும், ஒடுக்கப்பட்டோர் இயக்கங்களும் போராடிப் பெற்ற சமூக நீதி, இன உணர்வு, கருத்துரிமை ஆகியனவற்றை மட்டுமின்றி, நம் உயிர்களையும் நாம் இழக்க நேரிடலாம். முற்போக்குச் சிந்தனையாளர்கள், மதச் சார்பற்றோர் அனைவரும் ஒருங்கிணைந்து நிற்க வேண்டிய நேரம் இது!

## ‘நீட்’டுக்கு எதிராகப் பேரவை கண்டன ஆர்ப்பாட்டம்








**06.08.2017** அன்று காலை, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில், மாணவி அனிதாவின் உயிரைப் பறித்த நீட் தேர்வை எதிர்த்து, சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில், பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




# சிக்கு புக்கு, சிக்கு புக்கு ரயிலே..

● சிவதி

யானை, கடல், ரயில். இம்மூன்றும் எப்போதும் வாழ்வில் அலுக்காதவை. இவற்றை எப்போது மீண்டும் மீண்டும் பார்த்தாலும் அதன் மீதான ஈர்ப்பு எப்போதும் நமக்குக் குறைவதில்லை. யானையைக் காண முடியாமலும் கடல் காண முடியாமலும் நம்மில் பலர் இருக்க கூடும். ஆனால் ஒருபோதும் ரயிலில் பயணம் செய்யாதவர் எண்ணிக்கை அரிது. அவ்வாறு ஒருமுறையேனும் ரயில் பயணம் செய்ய வாய்ப்பு அமையாதோர் எதையோ வாழ்வில் இழந்தவராவார். அன்னையைப் போன்று அலுப்பில்லாமல் தாளாட்டி நம்மை விரும்பும் இடத்திற்குக் கடத்தும் மிக நல்ல அறிவியல் கண்டுபிடிப்பு.

அதிகமான ஜனக்கொத்தை அள்ளிக்கொண்டு குதூகலமாக ஓடும் ரயிலினைப் பார்க்கப் பார்க்க மகிழ்ச்சி. பயணம் நினைத்தபடி அமைந்துவிட்டால் பெருமகிழ்ச்சி. தொடரிதான் எப்போதும் உங்களை ஆளுமை செய்யுமே ஒழியே நீங்கள் அதனை ஆளுமை செய்யலாகாது. ஆனால் அதனை அறியலாம். அதன் பயன்பாட்டினை நாம் பெறலாம். இதற்கு ஆண்ட்ராய்டு தொழில் நுட்பம் எப்படிப் பயன்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

Google Play Store க்கு சென்று NTES என்று தட்டச்சு செய்து National Train Enquiry System செயலியினை நிறுவிக் கொள்ளுங்கள். இந்தச் செயலிக்கு User Name, Password ஏதும் தேவையில்லை. கைக்குள் அனைத்து விவரங்களும் வந்துவிடும். உங்களுடைய தொடரி எப்போது எங்கு வரும் என்ற விவரங்களை வரிசையில் கால் கடுக்கக் காத்திருக்கத் தேவையில்லை. Spot your Train என்ற option வழியே சென்று உங்கள் Train No. யும், பயண நாளையும் உள்ளீடு செய்யுங்கள். அடுத்த நொடிப்பொழுதே உங்கள் வண்டி இப்போது எங்கே இருக்கிறது. சரியான நேரத்திற்கு வருமா? தாமதமாக வருமா? என்ற விவரங்களை நீங்கள் பெறலாம்.

இரவு நேரப் பயணத்தில் விழிக்கும் போதும் போது நமது வண்டி எங்கே நிற்கிறது என்ற கேள்வி நமக்குள் வரும். இந்தியாவின் அனைத்து ரயில் நிலையங்களும் ஒன்று போலவே காட்சி தருகின்றன. எங்கே இருக்கிறோம் என்பதை பிறரின் உதவியின்றி அறிவது சற்று சிரமான ஒன்றுதான். குளிரூட்டப்பட்ட பெட்டி எனில் இன்னும் மோசம். சில நேரங்களில் இரவா, பகலா என்று கூடத் தெரிவதில்லை. இரண்டாம் வகுப்பு பயணிகளைப்போல குளிர்சாதனப் பெட்டிப் பயணிகள் இயல்பாகப் பேசுவதும் அரிதாகிவிடுகிறது. சரி இருக்கட்டும். ரயில் சேவையினை நாம் முழுமையாகப்பெறவும் தகவலினைத் துல்லியாமாகப்பெறவும் இந்த செயலி வழியே முடியும்.

சரி, இப்போது ஒரு ரயில் நிலையத்தின் நடை மேடையில் நிற்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் இருக்கும் ஊரின் பெயரையும் நீங்கள் செல்லவிருக்கும் ஊரின் பெயரையும் உள்ளீடு செய்யுங்கள் போதும். இன்னும் இரண்டு மணிநேரத்திற்கும் நான்கு மணி நேரத்திற்கும் எத்தனை வண்டிகள் உள்ளன. அவற்றின் பயண நேரம் என்ன? எத்தனை மணிக்குச் சென்றடையும் என்ற விவரங்கள் பெறலாம்.

அது போலவே Train Schedule என்ற பகுதி வழியே, ஒரு நிலையத்தில் இந்தத் தொடரி நிற்குமா நிற்காதா? எத்தனை மணித்துளிகள் நிற்கும் என்ற விவரங்களைப் பெறலாம். இது உங்கள் நண்பருக்காக வரும் வழியில் சந்திக்கும் நேரத்தினை அழகாகத் திட்டமிடலாம். இல்லை சில நேரங்களில் நிலையத்தில் ரயில் நிற்கும் போது உணவுப் பண்டங்கள் வாங்கி வருதற்குள் ரயில் புறப்பட்டுவிடுமோ என்ற அச்சமும் உங்களுக்குத் தேவையில்லை. இந்தச் செயலி இந்தியன் ரயில்வே நிர்வாகத்தின் மூலமாக இயக்கப் பெறுவதால் தகவல் 99% நம்பலாம்.

பயணம் செய்யும் போதும் நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரம் எவ்வளவு என்பது வண்டியின் பயண நிரலிலேயே உள்ளது. நிலையத்தின் எழுத்துக் குறியீடுகளோடு தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஒரே இடத்திற்குச் செல்லும் இருவேறு தொடர்வண்டிகள் எத்தனை நிலையங்கள் நிற்கும் என்பதைத் தெரிந்துகொண்டு கூட நாம் பயணத்தினை முடிவு செய்து அதற்குத் தகுந்தவாறு பயணச்சீட்டை நாம் பதிவு செய்யலாம். சில நேரங்களில் இருக்கை கிடைக்கிறதே என்று பல ஊர்களுக்குச் சுற்றிச் சுற்றிச் செல்லும் வண்டியினைத் தேர்வு செய்துவிட்டு அதிக இன்னலுக்குள்ளாவோம். இதைத் தவிர்க்கலாம்.

பெருமழைக்காலம் மற்றும் அசாதாரண நேரத்தில் ரயில் வண்டிகள் ரத்து செய்யப்படுவதும் மாற்றுப்பாதையில் விடுவதும், கால தாமதமாக இயக்கப்படுவதும் வாடிக்கையான ஒன்று. அப்போதெல்லாம் தொலைகாட்சி மற்றும் இதர செய்திகளுக்காகக் காத்திருப்போம். அல்லது ரயில்வே தொலைபேசி எண்ணான 139க்கு அழைப்போம். 1 அழுத்தவும் 2 அழுத்தவும் என்ற அறிவிப்பு நம்மை எரிச்சலூட்டுவது மட்டுமல்லாமல் சரியான தகவலைப் பெறுவதற்குள் போதும் போதுமென்றாகிவிடும். இது போன்ற பொறுமையினைச் சோதிக்கும் நிலை இனி இல்லை.

நம் கைகளில் உள்ள திறன் பேசி வழியே இந்தச் செயலியினைத் தட்டினால் போதும். மாற்றம் செய்யப்பட்ட தடத்தின் விவரங்களின் பட்டியலினைக் கொட்டித் தீர்க்கிறது. அது மட்டுமல்லாமல் மாற்றம் செய்யப்பட்ட நேரத்தின்படி எங்கே, எப்போது புறப்பட்ட எந்தெந்த நிலையத்தில் எப்போதும் நிற்கும் என்ற நேரப்பட்டியலினைத் தந்துவிடுகிறது.

நீங்கள் அடிக்கடி பயனம் செய்யும் ரயில் ராசதானியோ அல்லது பாண்டியனாகவோ இருக்கட்டும். அதுபற்றிக் கவலையில்லை. அதனை Favourite எனக்குறித்துவிட்டால் போதும் நீங்கள் ஒவ்வொரு முறையும் ரயில் எண்களைத் தட்டாமல் மிக எளிதாகப் பயண நிரலினைக் கண்காணித்துக் கொள்ள முடியும். இந்தியன் ரயில்வே தொடர்பாக எண்ணற்ற செயலி இருந்த போதும் இது அரசு நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் செயலி என்பதால் நம்பகத்தன்மை அதிகமாக உள்ளது. இதர செயலிகள் தனியார் வழியே செயல்படுவதால் விளம்பரம் அதிகம், நம்பகத்தன்மை குறைவு.

ஆளும் இந்திய நடுவண் அரசுக்கு 'மதம்' பிடித்திருக்கிறது. அரசு ரயிலுக்குத் 'தாமதம்' பிடித்திருக்கிறது. நாம் தாமதங்களை அறிந்து நமது செயல் திட்டங்களைச் சரிவர வகுத்துக்கொள்வோம். இனி புறப்படுங்கள் தோழர்களே பயணம். ரயில் பயணம் செய்யும் அனைவரிடமும் இருக்க வேண்டிய செயலி இது. ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.